# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

**சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி**

## கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



“கல்வி ஒன்றே அழியாச் செல்வம்”, “கல்வியே நாட்டின் முதன் அரண்” என்ற பழமொழிகளுக்கேற்ப அடுத்த தலைமுறை உயர்கல்வி பெறப் பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவும், தமிழ்நாட்டின் மாணவர்களின் உயர்கல்வி விகிதாச்சாரத்தை உயர்த்துவதற்காகவும், உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கடந்த 11 ஆண்டுகளாக வெற்றிகரமாகத் தொண்டாற்றி வருகிறது. இத்திட்டத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் அறக்கட்டளை உறுப்பினர்கள், நிதிக்குழு உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் ஜவ்வாது மலை ஒன்றியத்திற்குட்பட்ட மாணவர்களின் உயர்கல்வியில் முன்மாதிரி மாவட்டங்களாக விளங்க வேண்டுமென்பது என் விருப்பம். இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை இதுவரை 6824 மாணவர்களுக்கு 7 கோடியே 93 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கியுள்ளது. உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் (GER-Gross Enrolment Ratio) இந்தியா 27%, தென்கொரியா 100%, அமெரிக்கா 88%, சீனா 58% ஆக இருக்கின்றது. 25 முதல் 35 நாடுகளில் பள்ளி கல்வி மட்டுமல்லாமல் உயர்கல்வியும் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த மாற்றங்களை இந்தியாவிலும் கொண்டு வரவேண்டும். 140 நாடுகள் இந்தியாவைவிட கல்விக்காக அதிகமாகச் செலவிடுகிறார்கள். இந்தியா இன்னும் அதிகமாக வளர வேண்டும், அதற்கு மாணவர்கள் உயர்கல்வி பயில வேண்டும். குடும்பம், சமுதாயம் நாடு வளர்வதற்கு ஒரே வழி கல்வி 1960-இல் இந்தியாவும், தென்கொரியாவும் கல்வியில் ஒரே நிலையில் இருந்தன, 1980-இல் இந்தியாவை விட சீனா GDP (Gross Domestic Product) 5 மடங்கு வளர்ந்து இருக்கிறார்கள். மாநில அரசும், மத்திய அரசும் கூடுதலாகக் கல்விக்குச் செலவிட வேண்டும். ஜப்பான், தென்கொரியா, சீனா போல அனைத்திலும் முன்னேற வேண்டும் என்றால் மாணவர்கள் அதிகக் கவனத்துடனும், அக்கறையுடனும் படிக்க வேண்டும். கல்வியில் பின்தங்கியவர்கள், வருமானத்திலும் பின்தங்கியவர்கள், கல்வியில் வளர்ந்தவர்கள், பொருளாதாரத்திலும் வளர்ந்தவர்கள் ஆவார்கள். எனவே, கல்விதான் வீட்டையும், நாட்டையும் உயர்த்தும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு உயர்கல்வி அளித்துவிட்டால், அவர் படித்து நல்ல வேலையில் அமர்ந்து தன்னுடைய சகோதர சகோதரிகளைப் படிக்க வைத்து, ஒவ்வொரு குடும்பமும் முன்னேறும்போது உயர்கல்வியும், வேலைவாய்ப்பும், மாவட்டம், மாநிலம் மற்றும் நாட்டின் வளர்ச்சியும் ஒரு சேர உயரும் என்பது என் நம்பிக்கை.

## திரு. சி. கைசர் அகமது, அறக்கட்டளை உறுப்பினர்




மனித வாழ்வில் கல்வி என்பது பிரிக்க முடியாத ஓர் அங்கமாக மாறியிருக்கிறது. ஒருவருக்குப் பெருமையை தரக்கூடியது கல்விச் செல்வமேயன்றி வேறில்லை.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

என்கிறார் வள்ளுவர். அதாவது கல்வி கற்றவர்கள் மட்டுமே கண் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். கல்வி கற்காதவர்களுக்கு இரண்டு கண்கள் இருந்தாலும் கண் இல்லாதவராகவே கருதப்படுவர். “கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற மூதுரைக்குச்” சிறப்பு சேர்க்கும் பொருட்டு உயர்கல்வியை ஏழை எளிய மாணவர்கள் பெற வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தில் உருவாக்கப்பட்ட இந்த அறக்கட்டளை ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகையை வழங்கி வருகிறது.

## திரு. கே.எம். தேவராஜ், அறக்கட்டளை உறுப்பினர்



ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

எனும் குறள் மூலம் ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வி ஒருவற்கு ஏழு பிறப்பிற்கும் தொடரும் என்கிறார் வள்ளுவர். ஒரு தந்தையின் கடன் தன் மகனைச் சான்றோன் என்னும் நிலையில் உயர்த்திப் பார்த்தல் ஆகும். இதற்குச் சிறந்த வழி கல்வியாகும். அதற்காக அனைவர்க்கும் உயர்கல்வி அறகட்டளையின் தலைவர் கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமையில் செயல்படும் அனைவர்க்கும் உயர்கல்வித் திட்டம் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் ஜவ்வாதுமலை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வாழும் ஏழை எளிய மாணவர்களின் மேற்படிப்பு தடைகள் ஏதும் ஏற்படாமல் இருக்க இத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கின்றது. உயர்கல்வி உதவித்தொகைத் தருவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு வருடமும் இவ்வறக்கட்டளை அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்குச் சென்று உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி ஏற்பாடு செய்து மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்குகிறது.

## கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வழங்குதல்


தினகரன் 4 Vellore 14.7.2022

அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளையின்

உயர்கல்வி உதவித்தொகை பெறுவதற்கு பின்தங்கிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் அறிவிப்பு

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகை பெற வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டம், ஜவ்வாதுமலை ஒன்றியத்திற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்குக் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களைப் பெறுவதற்குக் கொரோனா காலத்தைக் கருத்தில் கொண்டு இணையவழி விண்ணப்பம் உருவாக்கப்பட்டது. இதில் ஜூலை 13, 2022 முதல் ஆகஸ்ட் 08, 2022 வரை 22 நாள்களில் 2001 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. உதவித்தொகை விண்ணப்பம் வழங்கும் தகவல்கள் ஜூலை 14, 2022 நாளிதழ்களில் வெளியிடப்பட்டன.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு











2022 - 23 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான முதற்கட்ட நேர்காணல் 13 அக்டோபர் 2022 முதல் 13 டிசம்பர் 2022 வரை நடைபெற்றது. இதில் வேலூர், காட்பாடி, கீ.வ.குப்பம், குடியாத்தம், அணைக்கட்டு, பேர்ணாம்பட்டு, மாதனூர், ஆலங்காயம், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், கந்திலி, நாட்றாம்பள்ளி, ஆற்காடு, திமிரி, வாலாஜா, சோளிங்கர், நெமிலி, அரக்கோணம் மற்றும் ஜவ்வாதுமலை முதலிய பகுதியிலிருந்து மொத்தம் 642 மாணவ மாணவியர்கள் தமது பெற்றோர்களுடன் வந்து நேர்காணலில் கலந்துகொண்டனர். அதில் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை அறிந்து மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்காக நேர்காணலின் மூலம் தேர்வு செய்யப்பட்டது. அறக்கட்டளைப் பணியாளர்கள் உதவித்தொகை விண்ணப்பித்த மாணவர்களின் இருப்பிடத்திற்குச் சென்றும் ஆய்வு செய்தனர்.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குதல்


6 வேலூர் 28.9.2022 முரசு

292 மாணவர்களுக்கு ₹17.49 லட்சம் உயர்கல்வி உதவித்தொகை

விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் வழங்கினார்

2021 - 22 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி செப்டம்பர் 27, 2022 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள சென்னாரெட்டி அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ. டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் திரு. எம். வெங்கடசுப்பு, நிதிக்குழுத் தலைவர் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை மற்றும் டாக்டர் டி. ஜெயபாரதி, பதிவாளர் விஐடி கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவில் 292 மாணவ மாணவியர்களுக்கு 17,49,000/- பதினேழு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.







universalhighereducationtrust

## உயர்கல்வி Sponsorship





கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி குடியாத்தம் மற்றும் ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி செவிலியர் கல்லூரியில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பரிந்துரைத்த தகுதி வாய்ந்த ஏழை, எளிய மாணவர்களுக்கு, உயர்கல்வி Sponsorship அளித்து வருகின்றனர். அதனடிப்படையில் இந்த ஆண்டும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர்களான திரு. கே.எம்.ஜி. இராஜேந்திரன், செயலாளர், கே.எம்.ஜி. கல்விக் குழுமம் அவர்கள் 8 மாணவர்களுக்கு உயர்கல்வி Sponsorship அளித்துள்ளார். ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி செவிலியர் கல்லூரி திரு. பாலாஜி லோகநாதன், தலைவர், அவர்கள் 3 மாணவியர்களுக்கு DGNM பிரிவில் உயர்கல்வி அளித்துள்ளார்.

## You are the Key - நீங்கள் தாம் திறவுகோல்



தினகரன் 22.10.2022 • Vellore 15

அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை கருத்தரங்கம்

**கடுமையாக உழைப்பதற்கு மாணவர்களை தயார்படுத்த வேண்டும்**

விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் பேச்சு







அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை வேலூர் மற்றும் ரோட்டரி மாவட்டம் - 3231 இணைந்து வழங்கிய “நீங்கள் தாம் திறவுகோல்” அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு அக்டோபர் 21, 2022 அன்று விஐடியில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இதில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள 300 தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். திரு. பி. மாலவன், ரோட்டரி மாவட்ட எழுத்தறிவுத் திட்ட இயக்குநர் வரவேற்புரை வழங்கினார். திரு. ஜே. லட்சுமணன், செயலாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, திரு. கே. ஜவரிலால் ஜெயின், பொருளாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, திரு. ஜே.கே.என். பழனி, மாவட்ட ஆளுநர், ரோட்டரி மாவட்டம் 3231, உயர்திரு. க. முனுசாமி, முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினராக உயர்திரு. பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். கௌரவ விருந்தினராக முனைவர். அ. கலியமூர்த்தி, மேனாள் காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் கலந்துகொண்டு “நீங்கள் தாம் திறவுகோல்” என்ற தலைப்பில் ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களின் எதிர்காலத்திற்கு எவ்வாறு திறவுகோலாக இருக்க வேண்டும் என்பதையும் ஏழை, எளிய மாணவர்களின் கல்விக்கண் திறப்பதற்கும், வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் இருப்பவர்கள் ஆசிரியர் தான் என்றும் ஒரு மாணவன் பெற்றோரை விட ஆசிரியர்களிடம்தான் அதிகமான நேரத்தைச் செலவிடுகிறான். ஆகவே வருங்கால இந்தியாவை உருவாக்குவதற்கு நீங்கள் தாம் திறவுகோல் என்பதை மேற்கோள் காட்டிக் கருத்தரங்கில் உரையாற்றினார். இவ்விழாவில் கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், தலைவர், உயர்கல்வி அறக்கட்டளை & நிறுவுநர் மற்றும் வேந்தர் விஐடி தலைமையுரை வழங்கித் தலைமை ஆசிரியர்களுக்கு ரோட்டரி மாவட்ட விருது வழங்கினார். ப. சுந்தர்ராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அவர்கள் நன்றியுரை கூற, நாட்டுப்பண்ணுடன் விழாவை நிறைவு செய்தனர்.



https://www.youtube.com/channel/UCLVTg6fj8gAw-1kqR7-Zz6A




## ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

TITLE : Employment and Employability Skills : Preparing Gen Z Students for the World of work

RESOURCE PERSON : Dr. R.Muthuveeran, Senior Researcher, Chair of Economics and Business Education, University of Cologne, Germany
PARTICIPANT : UG Final Year - 600 Students





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை மற்றும் வாணியம்பாடி இஸ்லாமியா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய வேலை வாய்ப்பிற்கான பயிற்சி நவம்பர் 22, 2022 அன்று நடைபெற்றது. அக்கல்லூரியில் படிக்கும் மாணவியர்க்குத் தொழில் மற்றும் தொழில் சார்ந்த திறமையை வளர்த்துக் கொள்வது குறித்தும், ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

## SHINE VII நிறைவு & SHINE VIII தொடக்கவிழா





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை, இணைந்து நடத்திய SHINE VII பகுதி நிறைவு & SHINE VIII பகுதி விஐடி, வளாகத்தில் நவம்பர் 21, 2022. திரு. ஜே. இலட்சுமணன், செயலாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்-கட்டளை அவர்கள் தலைமையேற்று விழாவைத் தொடங்கி வைத்தார். திரு. எஸ். சாத்தப்பன், பொது மேலாளர், CSR ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் & திரு. ப. சுந்தர்ராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. டி. சுப்புரத்தினம், இயக்குநர், SHINE பயிற்சி & மேலாளர் Talent Nurturing, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் அவர்கள் சிறப்புரை வழங்கினார். SHINE VII பகுதி பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி முடித்ததற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.


2 மாலை மலர் சென்னை 8—9—2022

பி.எஸ்சி., பி.சி.ஏ பட்டதாரிகளுக்கு

**வி.ஐ.டி. பல்கலைக்கழக வளாகத்தில் உதவித்தொகையுடன் தகவல் தொழில்நுட்ப பயிற்சி**

**அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை தலைவர் கோ.விசுவநாதன் தகவல்**

வேலூர், செப்.8—
விஐடியில் பி.எஸ்.சி., பி.சி.ஏ., பட்டதாரிகளுக்கு கல்வி உதவித்தொகையுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப பயிற்சிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை தலைவரும் விஐடி வேந்தருமான கோ.விசுவநாதன் தெரிவித்துள்ளார்.

வேலூர் விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் பி.எஸ்சி., பி.சி.ஏ., பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையுடன் கூடிய தகவல் தொழில்நுட்பத் துறை பயிற்சி அளிக்கப்படவுள்ளது. பயிற்சி முடித்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பு பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் நிறுவனமும் அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் இணைந்து வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்ட மாணவர்களுக்கு 4 மாத கால தகவல் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும்.

இந்த பயிற்சியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் 2021—22 கல்வியாண்டில் பி.எஸ்சி., கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம், கணிதம் மற்றும் பி.சி.ஏ., பாடப்பிரிவுகளில் குறைந்தபட்சம் 60 சதவீதம், 10—ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 தேர்வில் 60 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 84284—08872 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள் தங்களுடைய சுய விவரங்களை info.uhet@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இம்மாதம் 20—ந் தேதிக்குள் அனுப்பி பதிவு செய்துகொள்ள வேண்டும். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே திறனறித்தேர்வு மற்றும் நேர்காணலில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். இந்த தகவலை விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் தெரிவித்துள்ளார்.





## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

**சு. பூர்ணிமா**



நான் வேலூரில் காந்திநகர் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா பத்திரிக்கையாளர். வித்யா நிகேதன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 388/600 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். வேலூர், ஆக்ஸிலியம் கல்லூரியில் பி.பி.ஏ. (Hospital Administration) படித்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையினர் நேர்முகத்தேர்விற்கு வரவழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை நேரடியாக விசாரித்தனர். குடும்பச் சூழ்நிலையைப் பார்த்து நான் உயர்கல்வி பி.பி.ஏ. படிப்பதற்கு 3 ஆண்டுகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படித்து முடித்துச் சென்னை MIOT மருத்துவமனையில் Department Secretary-ஆக பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்தமைக்கு உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்றி.

**எஸ். ஜீவிதா**



என்னுடைய அப்பா கட்டட வேலை செய்கிறார். திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி அருகே உள்ள கேத்தாண்டப்பட்டி என்னும் கிராமத்தில் வசிக்கிறேன். நான் திருப்பத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 937 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். வெங்கடேஸ்வரா நர்சிங் கல்லூரி, ஓசூரில் பி.எஸ்.சி. செவிலியர் படித்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி வருவதை அறிந்து அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். என்னுடைய குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படிப்பு முடித்துச் சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் Staff Nurse-ஆகப் பணிபுரிகிறேன், நான் படித்து நல்ல வேலையில் இருப்பதற்கு உதவி செய்த அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் பெற்றோரின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


**வே. கணேஷ்குமார்**



நான் இராணிப்பேட்டை மாவட்டம் வாழைப்பந்தல் என்ற கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா நெசவு (கைத்தறி) வேலை செய்கிறார். அரசு மேல்நிலைப்பள்ளி, வாழைப்பந்தலில் 12 ஆம் வகுப்பில் 1078 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். நான் 12 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அலுவலர்கள் வருகைதந்து 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றிய விழிப்புணர்வு அளித்தனர். அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டனர். உயர்கல்விக்காக நான் ஓசூர் அதியமான் பொறியியல் கல்லூரியில் (Mechanical Engineering) படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது சென்னை TCS (Tata Consulting Solution)இல் System Associate Engineer ஆகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கும் என் போன்று பல மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு மனமார்ந்த நன்றி.


## கல்வி உதவித்தொகை பெற்றவர் - 6,824

### Gender (2012 - 2022)





Total = 6,824

### First Generation Graduates (2012 - 2022)





Total = 6,824

### Course (2012 - 2022)




Total = 6,824

### School wise Beneficiaries Breakup (2012 - 2022)




Total = 6,824




இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

திட்ட ஒருங்கிணைப்பாளர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore. - 632 014.
IFSC Code : IDIB000V086

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**